[8th March 1963

*Teachers Training (age limit)*

* 159 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that there is an order restricting the students of more than 25 years in getting admission in training schools for teachers; and

(*b*) whether the Government have any proposal to grant exemption to students who have worked in schools as untrained teachers for a period of one year and more, and to fix the age as 27 for their admission?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*): Under the Madras Educational Rules, the normal age-limit for candidates for admission in training schools is 25 and in the case of teachers employed in recognised schools for not less than three years, the age-limit is 35. The controlling authority has the discretion to relax these rules in special circumstances. There is no proposal with Government for fixing the age-limit as 27 for untrained teachers.

**திரு. கரு. சீமைச்சாமி:** ஸார், இப்போது 300 ஜனத்தொகை இருக்கிற கிராமங்களில் பள்ளிகள் திறக்க வேண்டியிருப்பதால் ஆசிரியர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே பயிற்சி பெறும் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. எவ்வளவு தேவைப்படு கிறதோ அந்த அளவுக்கு இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படும்.

**திரு. எஸ். முருகையன்:** வேலூர் மத்திய சிறையில் நீண்ட நாள் தண்டனை அடைந்த பலர் 25 வயதுக்குப் பிறகு எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்திருக்கிறார்கள். அவர்கள் விடுதலை ஆன பிறகு இது போன்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேர வயது நிர்ணயிக்காமல் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதுபற்றித் தனியாகக் கேள்வி வேண்டும்.

**பஞ்சாயத்து யூனியன் அலுவல்**

* 160 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன் சம்பந்தமான வேலைகளை பஞ்சாயத்துத் தலைவரோ அல்லது பஞ்சாயத்து மெம்பர்களோ தனிப்பட்ட முறையில் செய்யக்கூடாதென உத்தரவிடப்பட்டதா?

(இ) ஆம் எனின், அவ்வாறு வேலை செய்தால் அவர்கள் பதவி யிழக்கக்கூடும் எனவும் உத்திரவிடப்பட்டதா?